

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் அவர்கள் முன்னிலையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை பெறுவதற்கான ஒப்பளிப்பு ஆணைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (07.03.2017) வழங்கினார்.

செ வெ எண்: 168/ 2017 நாள்: 07.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் அவர்கள் முன்னிலையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை பெறுவதற்கான ஒப்பளிப்பு ஆணைகளை இன்று (07.03.2017) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2016 வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் வறட்சியால் பாதிக்கப்பட்ட 373.5717 ஹெக்டேர் நெல் விவசாய நிலங்களுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.50,43,447/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து நானூற்று நாற்பத்து ஏழு மட்டும்) -யினை 1,084 விவசாயிகளுக்கும், 130.5350 ஹெக்டேர் தோட்டப்பயிர்களுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.16,40,036/- (ரூபாய் பதினாறு இலட்சத்து நாற்பது ஆயிரத்து முப்பத்து ஆறு மட்டும்)-யினை 359 விவசாயிகளுக்கும், 1 ஹெக்டேர் பட்டுப்புழு வளர்ப்பு பயிர்களுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.7,400/- (ரூபாய் ஏழாயிரத்து நானூறு மட்டும்)-யினை 2 விவசாயிகளுக்கும் ஆக மொத்தம் 1,445 விவசாயிகளுக்கு ரூ.66,90,883/- (ரூபாய் அறுபத்து ஆறு இலட்சத்து தொன்னூறாயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்று மட்டும்)-யினை விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக வங்கிக் கணக்கில் சேர்க்கப்படவுள்ளது.

இதன் அடையாளமாக 10 விவசாயிகளுக்கு ஒப்பளிப்பு ஆணை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் அவர்களின் முன்னிலையில், இன்று (07.03.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் நடைப்பெற்றது.

மேற்படி கூட்டத்தில் 10 விவசாயிகளுக்கு ஒப்பளிப்பு ஆணைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் அவர்களின் முன்னிலையில், வழங்கினார்.

பின்னர், மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் அவர்கள் முன்னிலை உரையில் தெரிவித்ததாவது:

தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களின் மூலம் மானியங்கள் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரம் உயர வழி வகை செய்து வருகிறது. மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிவாரண உதவிகளை வழங்கி, மாவட்டம் முழுவதும் உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

நமது மாவட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் தமிழக அரசின் நிவாரணம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டதுடன், அரசு அலுவலர்கள் நேரடியாக சென்று விவசாயிகளின் நிலத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மேலும், நமது மாவட்டத்தில் சுமார் 2,300 குளங்கள் உள்ளது, இவை அனைத்தும் தூர்வாரி நீர் நிலையங்களை பாதுகாப்பது குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. நீர் நிலையங்களை பாதுகாத்தாலே, உற்பத்தி அதிகரிக்க செய்ய முடியும். அதன் மூலம் நிச்சயமாக விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும். எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு அலுவலர்களுக்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு.எம்.சேவியர் மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இளங்கோ, இணை இயக்குநர் திரு.சந்திர சேனன் நாயர் (விவசாயம்), துணை இயக்குநர் திரு.அசோக் மக்ரீன் (தோட்டக்கலை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.நிஜாம்முதின் (விவசாயம்), திரு.கனகராஜன், திரு.என்.என்.ஸ்ரீஜயப்பன், திரு. நாஞ்சில் சந்திரன், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.